
மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.




இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :


**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.


ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :


**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk


# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 23





- உயர்த்தப்பட்டவர்
- பூக்களைக் கொண்டு செய்தி சொல்
- தேவன், அடிப்படையான கோட்பாடுகள்
- உங்களுக்கு நீதி வேண்டுமா ?
- வாசித்திருக்கிறீர்களா ?
  இயேசுவின் தாயாகிய மரியாளை பற்றி!
- தேவனின் வீட்டைக் கட்டுதல்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறையிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

| | |
|---|---|
| லினஸ் டேனியேல் | : தலைமை ஒருங்கிணைப்பாளர் |
| ராஜபட்சம் ஆனந்தா | : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர் |
| பவித்ரா | : நிர்வாகம், உபப்பதிப்பாளர் |

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# உயர்த்தப்பட்டவர்


அண்ட வெளியிலிருந்து உலகைப் பார்க்கும் தருணம் வெகு சிலருக்கே கிடைத்திருக்கிறது. அங்கே நடந்தவர் அவர்களிலும் சிலரே. அப்படி நடக்கமுடியும் என்பதை நிரூபிக்க அல்லது விண்வெளிக்கலத்தினைப் பழுதுபார்க்க என நடந்திருக்கிறார்கள்.




நடைமுறைக்கு ஒத்துவராத சூழ்நிலைக்கு சென்று, அங்கு நடப்பதும் செயலாற்றுவதும் ஆச்சரியமான சாதனைதான். இருப்பினும், இத்தகைய அநேக ஆச்சரியமான காரியங்களைப் போல நாம் இதற்கும் பழகிப் போகிறோம்.

### சாதாரணகாரியம் என எடுத்துக் கொள்வது

புதன் கிரகத்தை ஆராய இன்னுமொரு விண்வெளிக்கலத்தை அனுப்பியது, விண்வெளி நிலையத்திலுள்ள ஆட்களுக்குப் பதில் வேறு ஆட்களை அனுப்புவது - இப்படிப்பட்ட விஷயங்கள் அநேக மக்களுக்கு மிகச் சாதாரணமாகப் போய்விட்டதால் அதைப் பற்றிப் பேசுவது கூடக்கிடையாது. ஆயினும் ஏப்ரல் 1961ல் தான் 27வயது யூரிகாகரின் எனும் சோவியத் விண்வெளி வீரன் அண்டவெளியில் வோஸ்டாக் 1 எனும் கலத்தில் ஏறத்தாழ 90 நிமிடங்கள் பறந்தான்.



அது 50 வருடங்களுக்கு முன் நடந்ததென்றாலும் இப்பொழுது நாம் விண்வெளிப் பயணத்தைச் சாதாரணமான ஒன்றாக எடுத்துக் கொள்கிறோம். இப்படி மனித சாதனைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப நம்மை மாற்றிக்கொள்ளும் திறன் படைத்தவர்களாயிருக்கிறோம். மனிதன் என்ன சாதிக்கக் கூடியவன் என்பது குறித்த நம் எதிர்பார்ப்பும் இத்தகையதாயுள்ளது. ஆனால் முதல் விண்வெளி மனிதனுக்கு என்ன நேர்ந்தது என்று உனக்குத்

தெரியுமா? அவன் விண்வெளிப்பயணம் செய்து ஏழு ஆண்டுகளுக்குப் பின், 34 வயது யூரிகாகரின் ஒரு ஜெட் விமானத்தில் பயிற்சிப் பயணம் செல்லுகையில் மரணமடைந்தான். நடைமுறைக்கு ஒத்துவராத, எதிரான சூழ்நிலையை மேற்கொள்ள மனிதனால் இன்னும் முடியவில்லை. அச்சூழ்நிலையில் அவனால் ஏதோ பிழைக்க மட்டும் முடிகிறது.

நீ எந்த அளவுக்கு உயரப் போனாலும், அந்த அளவுக்குக் கீழே விழுந்துதான் ஆகவேண்டும் என்றொரு பழங்கால வழக்கு உண்டு. அது உண்மை எனத் திரும்பத்திரும்ப நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மனித குலம் எந்த அளவிற்குத் தன் சாதனைகளின் மேல் கர்வம் கொள்கிறதோ, அந்த அளவிற்கு எல்லாமே நாசமாகி விழுந்து போம் என்ற அபாயம் இருக்கிறது. "விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை"

### எஜமானர்

தனக்கு எதிரான சூழ்நிலையை மேற்கொண்ட ஒரு மனிதர் ஒரு காலத்தில் இருந்தார். உயர்த்தப்பட்டவராய் அப்படிச் செய்தார். அந்த மனிதன் இயேசு கிறிஸ்து. கன்னி மரியாளிடத்தில் பிறந்த தேவகுமாரனாகிய அவர், ஒருமுறை கூடத் தன்னை உயர்த்திக் கொண்டதில்லை; அவர் சாதித்தவைகளைக் குறித்து ஒருமுறை கூட பெருமைபட்டுகொண்டதுமில்லை. அவரைப் பற்றி வேதவாக்கியம் இப்படிக் கூறுகிறது.

*"கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்" (பிலிப்பியர் 2:8).*

*"கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல்" (ரோமர் 15:3)*

*''அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை." (1 பேதுரு 2:22)*

*''அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு" (எபிரேயர் 5:8)*

*மேற்கண்ட குறிப்பிடத்தக்க செய்திகளை நாம் ஒருபோதும் சாதாரணமானவைகளாக எண்ணக் கூடாது. அவை கர்த்தராகிய இயேசுவுக்கு மனிதகுலத்திற்கு எஜமான் எனும் பதவியைக் குறித்துக் காட்டுகின்றன. ஏனெனில் எல்லாரும் தோற்றுப் போனாலும் இயேசு பரிபூரணமான கீழ்ப்படிதலை வாழ்ந்து காட்டினார். அதைத் தனக்கு எதிராக இருந்த சூழ்நிலையில் - நமக்கிருக்கும் இதே சுபாவத்தில் அவர் பங்கு பெற்றிருந்தும் - சாதித்தார். (எபிரேயர் 2:14;4:15)*

(இயேசு மட்டும் தீர்மானித்திருந்தால் தேவதூதர்களைத் தமக்கு உதவிக்கு அழைத்திருக்க முடியும் என ஒரு முறை கூறியிருந்தார். தாம் பிடிபடுவதையும் சிலுவையில் அறையப்படுவதையும் அவர் தடை செய்திருக்கக்கூடுமெனினும்,



இயேசு, மரணபரியந்தம் கீழ்ப்படிந்தார். தாமே முன்வந்து தன் ஜீவனை ஒப்புக்கொடுத்தார். இவையெல்லாமே தேவனுடைய மீட்பின் மகத்தான திட்டத்தின் ஒரு பகுதியாயிருந்தன. அதற்கு அவர் மனமுவந்து தன்னை ஈடுபடுத்த வேண்டியது தேவைப்பட்டது. நமக்காக அதை நிறைவேற்றினார்.)

### உயர்த்தப்பட்டார்

இயேசுவானவரின் ஒரு குறிப்பிட்ட கூற்று விளங்குவதற்கு அரிதானதாக இருந்தது. தமக்குப் பின்சென்றவர்களிடம் ஒருமுறை இப்படிக் கூறினார்.

*''சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்படவேண்டும்'' (யோவான் 3:14,15)*



வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குப் பயணித்துக் கொண்டிருந்த வழியில் இஸ்ரவேலுக்கு வனாந்தரத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டார். அவர்களின் பாவம் தேவ தண்டனையை அவர்கள் மேல் கொண்டு வந்தது. அதற்கு மோசே கொடுக்கக் கூடிய ஒரே பரிகாரம், அவர்களைக் கடித்துக் கொண்டிருந்த சர்ப்பங்களைப் போன்றதொரு வெண்கல சர்ப்பத்தைச் செய்து ஒரு கோலின் உச்சியிலே அதைத் தூக்கி வைத்தான். அதை நோக்கிப் பார்த்தவர் யாராயினும் சர்ப்பத்தின் விஷத்தினின்று காப்பாற்றப்பட்டார்கள். *"நோக்கிப்பார், இரட்சிப்பார்." "நோக்கிப்பார், பிழைப்பாய்"*

பாவமும் அதனோடு சேர்ந்த மரணமும் அழிக்கப்பட வேண்டுமாயின், பாவத்தின் விளைவுகள் ஒன்றுமில்லாமற்போக வேண்டுமாயின், தாம் உயர்த்தப்படவேண்டும் என இயேசு கூறினார். சிலுவையில் அவர் அறையப்படப்

போவதைத்தான் *"உயர்த்தப்படுதல்"* எனக் கூறினார். அவர் கொலையுண்ணப்படப் போவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் தான் இதை விளக்கிக் கூறினார். (யோவான் 12:32-34 பார்க்கவும்) பாவத்திற்கான பலியாக, பாவத்தை ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்க, நம்மைப்போன்ற பாவிகள் மன்னிக்கப்படுவதை சாத்தியமாக்க இயேசு மரித்தார். (ரோமர் 8:3) வேறு எவரையும் விட உயர்ந்த நிலையில் இருக்கத்தகுதி பெற்ற இவரை, மனித இனத்திற்கு மேலாக உயர்த்தப் பட்ட இந்த மனிதனை நாம் நோக்கிப் பார்த்தால், நாமும் கூட ஒரு புதிய வாழ்க்கைக்குள்ளாக உயர்த்தப்படுவோம்.

**உன்னதங்கள்**

கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுபவர்கள் மற்றும் அவரில் விசுவாசம் வைப்பவர்களின் அந்தஸ்தை விவரிக்க வேதவாக்கியம் அண்டவெளி மற்றும் உன்னதத்தின் மொழியைப் பயன்படுத்துகிறது. ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் பற்றி தங்கள் வாழ்க்கையை அவருடைய ஊழியத்திற்கென அர்ப்பணித்தவர்கள் குறித்து, பவுல் அப்போஸ்தலன் இவ்வாறு எழுதுகிறார்.

*"தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்" (எபேசியர் 2:4-7)*

இயேசுவானவர், அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின் உன்னத்திற்கு உயர்த்தப்பட்டார். இப்பொழுது மோட்சத்தில் பிதாவின் வலதுபாரிசத்தில் மகிமையில் வீற்றிருக்கிறார். அவர் மெய்யாகவே உன்னதங்களுக்கு உயர்த்தப் பட்டிருக்கிறார். அவரை நோக்கிப் பார்த்தவர்கள், அவருடைய இரட்சிக்கும் நாமத்தில் விசுவாசம் வைத்து ஞானஸ்நானம் பெற்றோர் தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினர்களாகிறார்கள். எல்லாம் வல்லவரின் குமாரரும் குமாரத்திகளாக, அவருடைய வெற்றியில் பங்கு கொள்ளவும், உயர்ந்த ஸ்தானத்தைப் பெறவும் அவர்கள் வருகிறார்கள். அவர்கள் விண்வெளியில் நடக்காமலிருக்கலாம், ஆனால் இப்போது அவர்கள் தேவனோடு நடக்கக் கூடும். அவர்கள் காலடிகள் எப்போதும் முன்னோக்கியும் மேல்நோக்கியும் இந்த வாழ்க்கையிலும் வரப் போகும் வாழ்க்கையிலும் மேன்மையான காரியங்களை நோக்கிச் செல்லுகின்றன.




# பூக்களைக் கொண்டு செய்தி சொல்




நண்டுத்தனமாயிருப்பதால் உனக்கு யாதொரு பயனுமில்லை. ஆகவே கடல் நண்டுகளைப் போலவே செயல்படு - பூக்களைக் கொண்டு செய்தி சொல்! கடல் நண்டு தன்னைக் காத்துக்கொள்ள அல்லது சண்டையிட அதற்கு கொடுக்குகளோ பிடிப்பான்களோ எதுவுமே இல்லை. ஆனால் அது தோற்றமளிப்பது போல அமைதியானது. சாதுவானது அல்ல. கடல் சாமந்தி (**Sea anemone**) என்ற கடல் வாழ் உயிரினத்திற்குக் கொடுக்குகள் உண்டு. அந்தக் கொடுக்கு நண்டைப் பாதிப்பதில்லை. பகை உயிரினத்தை எதிர் கொள்கையில், நண்டு அருகிலிருக்கும் கடல்சாமந்தியைப் பிடித்து பகை உயிரினம் முன்வேகமாக ஆட்டும். அதன் பகைவ உயிருனமும் பூ தரும் செய்தியைப் பெற்று விலகிச் சென்றுவிடும்.

**தரித்து நின்று தேவனுடைய அற்புதங்களை பாரும். (யோப். 37:14)**

திருவாளர் நண்டு எப்படி இதைச் செய்ய முடிகிறது என்பது மர்மமாக இருக்கிறது. ஒரு சிறுவர் பாடபுத்தகத்தில் *''நண்டு கடல்சாமந்தியை எப்படிப் பயன்படுத்துவது எனக் கற்றுக்கொண்டதா ? அல்லது தன்னைக் காத்துக் கொள்ளும் உணர்வினால் அப்படிச் செய்கிறதா ? கடல் சாமந்தி எப்படி உடனே செயல்படுகிறது ?''* என்று வினாக்கள் எழுப்பியுள்ளார்கள்.



ஹெர்மிற் நண்டு தன் கூட்டின் மீது கடல்சாமந்தியைச் சுமந்து செல்கிறது. அந்தக் கூட்டை அது வேறு ஒன்றினிடமிருந்து பெற்றது. கடல் சாமந்தி அந்தக் கூட்டின் மேல் அமர்ந்து பயணிப்பதை விரும்புகிறது.



# தேவன், அடிப்படையான கோட்பாடுகள்

## நாம் தேவனை அறிவது எங்ஙனம்?

உலகத்தின் ஒழுங்கு நிலையும் வடிவமைப்பும் ஒரு சிருஷ்டிகளில் நமது நம்பிக்கையை ஊக்குவித்தாலும், தம்மைக் குறித்த அவரது வெளிப்பாடு மற்றும் அவரது வழிகள் வாயிலாக மட்டுமே நாம் தேவனை அறிய முடியும். விசுவாச மனிதர்களின் மூலமாக தேவனே எழுதியதாக தகுதி உடையதாயுள்ள பரிசுத்த வேதாகமத்தில் இவ்வெளிப்பாடு உள்ளது. *(II தீமோத்தேயு 3:16, IIபேதுரு 1:21, எபிரெயர் 1:1,2).* அவரது சுபாவம், அவரது குணாதிசயம், அவரது சிந்தை மற்றும் அவரது நோக்கம் பற்றிய அவரது வெளிப்பாட்டை வேதத்தில் நாம் காணலாம். மனிதரின் வழிகள் மற்றும் யோசனைகளை விட அவரது வழிகளும் யோசனைகளும் மேலானவை எனக் கூறப்பட்டுள்ளது. *“என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.”* (ஏசாயா 55:8,9; I கொரிந்தியர் 1:25-29 படிக்கவும்).

## அவரது சுபாவம்

எப்போதும் இருக்கின்ற, அழியாமையுடைய, அளவற்ற ஞானம், புரிந்துகொள்ளுதல் மற்றும் வல்லமையுள்ள உன்னதமான வஸ்துவாகத் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார். *(I தீமோத்தேயு 1:17; 6:15; சங்கீதம் 90:1-3; 145:3; 147:5; ஏசாயா 45:5,18).* வானங்களையும் பூமியையும் படைத்தவராகவும் ஜீவராசிகள் யாவற்றுக்கும் உயிரளிப்பவராகவும் அவர் அறிவிக்கப்படுகிறார் *(ஆதியாகமம் 1:1; எரேமியா 10:7,10-12; அப்போஸ்தலர் 14:15; 17:24).* அவர் ஜீவனைப் படைப்பதுடன் அதைக் காத்துப் பேணுகிறார்; அவருக்குச் சரியாய்த் தோன்றும்போது அவர் ஜீவனை எடுத்துக்கொள்ளுகிறார். *(சங்கீதம் 104; உபாகமம் 32:39; அப்போஸ்தலர் 17:25,28).*

## அவரது குணாதிசயம்

தேவன் தமது குணாதிசயத்தைக் குறிப்பாக மோசேக்குத் தெரிவித்தார்: *“கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகாதயையும் சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல்.... விசாரிக்கிறவர்” (யாத்திராகமம் 34:6,7).* மனுக்குலத்தோடு, சிறப்பாக இஸ்ரவேல் தேசத்தாருடனான அவரது செயல்பாடுகளில் அவரது குணாதிசயத்தை நாம் காணலாம். இஸ்ரவேல் தேசத்தாருடனான தேவனின் கிருபைகள் அவரது அன்பையும் பொறுமையையும் மட்டுமல்லாது பாவத்தை அவர் சகிக்க முடியாததையும் அவரது வழிகளுக்கெதிரான அடங்காமையையும் திருஷ்டாந்தப்படுத்துகின்றன. *(சங்கீதம் 103:8-13; ஆபகூக் 1:13; உபாகமம் 4:24).* சர்வவல்லவரின் குணாதிசயத்தினுடைய இந்த இருபண்புக்கூறுகளை, *“தேவனுடைய தயவு, கண்டிப்பு”* எனப் பவுல் விளக்குகிறார் (ரோமர் 11:22).

---

# உங்களுக்கு நீதி வேண்டுமா?

## தியானப்பகுதி


ஒரு வயது முதிர்ந்த நடிகை, தம்மை 30 வருடங்களுக்கு முன்பு அற்புதமான புகைப்படங்களை பிடித்த, அந்த புகைப்பட நிபுணரை பார்த்து சில புகைப்படங்களை எடுக்கும்படியாக விரும்பினார்கள். அதிக பிரயாசப்பட்டு அந்த புகைப்பட நிபுணரை கண்டுபிடித்து இந்த காரியத்தை ஒப்புக் கொடுத்தார்கள். அவர் புகைப்பட பிரதிகளை / மாதிரி புகைப்படங்களை, கொடுத்தபோது அந்த நடிகை அதிக மூர்க்கமடைந்தவளாய் கலங்கி அலறினாள். “இந்த புகைப்படங்கள் எனக்கு நீதி செய்யவில்லை” என்று புலம்பினாள். பொறுமையான அந்த புகைப்பட நிபுணர் அந்த படத்தை பார்த்து அந்த புகைப்படங்கள் 30 வருடத்திற்கு முன்பு பிடிக்கப்பட்டன என விளக்கினார். பிறகு அவர், இதில் உங்களுக்கு நீதியல்ல, இரக்கம் தேவை என விளக்கினார்.

நாமும் அப்படியாக நீதியை யல்ல, இரக்கத்தையே நாடுவோம். *“ஆண்டவரே, எங்கள் அக்கிரமங்களுக்குத் தக்கதாக சரிக்கட்டினால், யார் உமக்கு முன்பாக நிலைநிற்பார்கள்”* என்று சங்கீதக்காரனாகிய தாவீது சொல்கிறார். மாறாக, மற்றவர்களுக்கு நீதி செய்யப்படவேண்டும். நமக்கு இரக்கம் கிடைக்கவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

நாம் ரோட்டில் கடந்து செல்லும்போது ஒருவன் “நிற்க” என்று சொல்லும் (சைகைகாட்டி) Signal இடத்தில் நிற்காமல், சிறிது வேகம் குறைக்காமலும் ஓட்டுகின்ற, ஓட்டுனரை பார்த்து, அந்த இடத்தில் இவரை தண்டிக்கும்படியாக / கண்டிக்கும்படியாக எந்த அதிகாரிகளும் இல்லையே என நினைக்கிறோம். ஆனால் சில வேளைகளில் நாம் கவனக்குறைவாக, நிறுத்தாமல் வேகமாக ஓட்டிச் சென்று நம்மை யாரும் பார்க்காவிடில் நலமாயிருக்கும் என நினைக்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு, இப்படியாக கூறியுள்ளார். "பிதா உங்களிடத்தல் இரக்கமாய் இருப்பது போல், நீங்களும் பிறரிடத்தில் இரக்கமாய் இருங்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அதே அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்று கூறியுள்ளார்.

இயேசு, நாம் ஒரு முக்கியமான பாடத்தை கற்றுக்கொள்ள விரும்புகிறார். அவர் நாம் இரக்கமாய் இருக்கவேண்டும் என விரும்புகிறார். ஒரு ராஜா தம் வேலைக்காரரை அழைத்து கணக்குப் பார்க்கும்படியாக சொல்லப்பட்டிருக்கின்ற உயமையிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ராஜா கணக்கு பார்க்கத் தொடங்கிய போது, பதினாயிரம் தாலந்து கடன் பட்டவன், தன் கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவன் தாழ விழுந்து வணங்கி, என்னிடத்தில் பொறுமையாயிரும் என்று கெஞ்சி நின்றபோது, அந்த ஊழியக்காரனுடைய எஜமான் மனதிரங்கி, அவனை விடுதலை பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்து விட்டான். ஆனால் அவனோ, தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டவனை பிடித்து, தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனை கொடுத்தே தீரவேண்டும் என்றான். இதைக்கேள்விப்பட்ட அந்த எஜமான் அவனை அழைப்பித்து *''பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியால் அந்த கடன் முழுவதையும் உனக்கு மன்னித்து விட்டேன், நான் உனக்கு இரங்கினது போல், நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி அவனுடைய எஜமான் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்கு கொடுத்துத் தீர்க்கும்படியும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக் கொடுத்தான்."*



*"நீங்கள் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனுப்பூர்வமாய் மன்னியாமற் போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்".*

துரும்பும் உத்திரத்தையும் பற்றி கூறியுள்ள உவமையிலும் முக்கியமான



கருத்தை அறிந்துக் கொள்ளலாம். *''மாயக்காரனே, முதலாவது உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பிறகு உன் சகோதரன் கண்ணில் இருக்கிற துரும்பை எடுப்பாய்''* நம்முடைய பாவங்கள் நம் கண்களின் உத்திரத்தைப் போல மறைந்திருக்குமானால், நம் சகோதரனை நாம் தெளிவாக பார்க்க முடியாது. திருத்தும்படியாக எதையும் செய்யமுடியாது. நம்முடைய தப்பிதங்களை நாம் நினைத்து பார்க்காமல் மற்றவருடைய தப்பிதங்களை நாம் பார்க்கிறது எத்தனை துக்ககரமானது.

நாம் உண்மையாகவே எந்த அளவினாலே அளக்கிறோமோ, இதை மனதில் கொண்டு பார்க்கும்போது ஆண்டவருக்கு முன்பாக நாம் நிற்கும்போது, அவரின் இரக்கம் மிகவும் குறைந்ததாக இருக்கவேண்டும் என அறிந்துக்கொள்ள வேண்டும். ஆனால், நம் தேவனோ இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவர். "கிழக்கிற்க்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்" நமக்கு கிடைக்க வேண்டிய இரக்கத்தை நாமே குறைத்துக்கொள்கிறோம். மற்றவர்கள் மேல் நாம் குறைத்துக் கொள்கிறோம். மற்றவர்கள் மேல் நாம் எவ்வளவு இரக்கப்பாராட்டுகிறவர்களாக இருக்கிறோமோ. அப்படியே அவர் நமக்கு இரக்கம் பாராட்டுகிறார்.

இதை வெருமனே அறிந்துக் கொள்வதில் பிரயோஜனமில்லை அறிந்து நாம் அனுதினம் வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். பிதா உங்களில் இரக்கமாய் இருப்பது போல் நீங்கள் இரக்கமாய் இருங்கள்.

---

# வாசித்திருக்கிறீர்களா ? வாசித்தீர்களா ?

# இயேசுவின் தாயாகிய மரியாளை பற்றி !

**யார் அந்த மரியாள்**

ரோம சாம்ராஜ்யத்தின்கீழ், ரோமர்களால் நிரம்பியிருந்த பாலஸ்தீன நாட்டில், மரியாள் என்ற கன்னிப்பெண் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியாகி இயேசு கிறிஸ்துவை ஜநிப்பித்தாள். பிறகு அவள் யோசேப்பு என்பவரை திருமணம் செய்துக் கொண்டு குடும்பமாக நாசரேத் என்ற ஊரில் வசித்தனர். இயேசு தம்முடைய முப்பதாவது (30வது) வயதில் தன் தாயாரை கலிலேயாவிலே விட்டு, சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக உபதேசம் செய்தார்.

**பாலஸ்தீனாவிலிருந்த இஸ்ரவேல் தேசத்தில் வாழ்க்கை எவ்வாறு இருந்தது ?**

தேசம் பல தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, அரசாங்க ரீதியில் யார் யார் 'மன்னன் சீசரோடு' சாதகமாக இருக்கமுடியும். அல்லது இருக்க முடியாது என்று

தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருந்தது. ரோம் காரியஸ்தர்கள் கீழும், அரசாங்க சூழ்நிலைக்கேற்ப அமைந்திருந்தது. கி.மு. 37-34 வருடம் வரை ஏரோது ராஜா தேசத்தை ஒருமுகப்படுத்தி தம் கைக்குள்ளாய் வைத்து ஆட்சி செய்தான். 'அகஸ்து ராயனால்' உலக முழுவதிலும் 'குடிமதிப்பு' எழுதும்படியாக கட்டளை பிறப்பிக்கப்பட்டது. 'சிரேனியு' என்பவன் சீரியா தேசத்தின் அதிபதியாக இருந்த, அந்த சமயத்தில் யோசேப்பும், மரியாளும், குடிமதிப்பு எழுதுவதற்காக பெத்லேகேமுக்குச் சென்றனர். (லூக்க 2:1-2 வசனங்களை பார்க்கவும்).



## எப்போது அது நடந்தது ?

மரியாள் சுமார் கி.மு. B.C. 20ம் நூற்றாண்டில் பிறந்திருக்கக் கூடும். சுவிசேஷத்தின் இலக்கத்தின்படி அவளைக்குறித்த விவரம் சுமார் கி.மு. 4ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 30-ம் நூற்றாண்டு வரைக்கும் சொல்லப்பட்டுள்ளது. (ஏனெனில், துல்லியமாக காலங்களைக் குறித்து சொல்லப்படாததினால் இப்படி கணிக்கப்பட்டுள்ளது).

## இவற்றைக் குறித்து எங்கு காணலாம் ?

✦ மரியாளின் சிறு பருவ வாழ்க்கை

(மத்தேயு 1 மற்றும் 2ம் அதிகாரம் மற்றும் லூக்கா 1 மற்றும் 2ம் அதிகாரம்)

✦ இயேசு கிறிஸ்துவின் ஊழியக் காலங்கள்.

மத்தேயு 12:46-49 வசனங்கள் மற்றும் யோவான் 2:1-11 வசனங்கள்.

✦ இயேசுவின் சிலுவை மரணம்

யோவான் 19:25

## நான் என்ன கவனிக்க வேண்டும் ?

✦ மரியாளின் கீழ்ப்படிதல் தெய்வீகத்தன்மை (லூக்கா 1:30 வசனம்) அவளின் ஆழ்ந்த விசுவாசம் (லூக்கா 1:45-46 வசனங்கள்) தேவனின் திட்டத்தை/



நோக்கத்தை அறிந்தவளாகவும் மனித குலத்தை நேசிக்கிறவளாகவும் / அன்பு கூறுகிறவளாகவும் காணலாம்.

✦ யோசேப்பு அவளை திருமணம் செய்யாமல் இருந்ததினால், அவள் ஒரு திருமணமாகாத தாயாக இருந்திருப்பாள். யோசேப்பு, கர்த்தர் தம்முடன் பேசும் வரை, அவளுடைய உறவை எப்படியாவது தவிர்த்துவிட முயற்சி செய்தான். (மத்தேயு 1:19-20) உலக கண்ணோட்டத்தில் சட்டத்திற்கு புறம்பானவளாக இருந்தாள். இயேசு வாலிபனானபோதும் அப்படி இருந்தது. (யோவான் 8:41 வசனம் பார்க்கவும்).

✦ மீகா 5:2 மற்றும் மத்தேயு 2:4-5 வசனங்களில் இரட்சகராகிய இயேசு பெத்தலெகேமில் பிறப்பார் என்று தீர்க்கதரிசன வார்த்தைகளின்படி, மரியாள் தம் குடும்பத்தை விட்டு, ஒரு தெரியாத / தூர இடத்தில் பிரசவித்தாள். (லூக்கா 2:4)

✦ மரியாளும் யோசேப்பும் மிகவும் எளிமையானவர்கள். இயேசுவின் பிறப்பிற்கு பிறகு, அவர்களால் மோசேயின் கட்டளைப்படி சொல்லப்பட்ட பலிகளை செலுத்த முடியாமல் எளிமையான / அடிப்படையான சிறிய பலியையே செலுத்த முடிந்தது. (லூக்கா 2:22-24 மற்றும் லேவியராகமம் 12:6 வசனங்களை பார்க்கவும்)

✦ மரியாளும், அவள் கணவனும் இயேசுவின் பிறப்பிற்கு பிறகு இயல்பான திருமண வாழ்க்கை வாழ்ந்தனர் (மத்தேயு 1:18) பிறகு அவர்களுக்கு ஆறு பிள்ளைகள் இயேசுவுக்கு பிறகு பிறந்தனர் (மத்தேயு 13:55-56 வசனங்கள் பார்க்கவும்).

✦ ஞானமும், புத்தியுமுள்ளவர்களாய் வளர்த்து (லூக்கா 2:51), தன் மகனை புரிந்துக் கொள்ளாவிடினும், தன் மகன்மேல் நம்பிக்கையுள்ளவளாய் (யோவான் 2:3-5) இருந்தாள். (லூக்கா 2:41-49, மத்யே 12:46-50, மாற்கு 3:31-35, லூக்கா 8:19-21 போன்ற வசனங்களை பார்க்கவும்).

✦ "உன் ஆத்துமாவையும், ஒரு பட்டயம் உருவிப்போம்" என்று லூக்கா 2:35ல் சொல்லப்பட்டுள்ளது. ஒருவேளை இயேசு தம் ஊழியத்தை துவங்கும்போது, ஒரு விதவையாக இருந்த மரியாளுக்கு ஒரு நல்ல துணையாக இருந்தவரை, நம்பிக்கைக்கு பாத்திரவானாக இருப்பவரை இழந்து போவோமே என்ற வேதனையோடு இருந்தாள். மற்றும் இயேசு வேதபாரகருக்கு மத்தியிலே எத்தனை விரும்பப்படாதவராய் / அறிமுகமில்லாதவராய் இருந்தது அவர்களுக்கு மிகவும் வேதனையான காரியமாக இருந்தது. இறுதியாக,

இயேசுவை சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது அவருக்கு அருகாமையில் இருந்து அந்த வேதனைகளை காணும்போது, அந்த துன்பத்தை இயேசுவுக்காய் தாமே சுமந்திருக்கலாம் என்று கலங்கி நின்ற வேளையாக இருந்தது.

✦ இயேசு பரத்திற்கு ஏறினபோது, மரியாள், ஆதி திருச்சபையான இயேசுவின் சீடர்களான அப்போஸ்தலரோடும், தங்கள் பிள்ளைகளும், மற்றவர்களும் மேல்வீட்டறையில் கூடியிருந்த இடத்தில் இருந்ததாக வேதம் சொல்லுகிறது. (அப்போஸ்தலர் 1:14).

✦ தேவன் தம்முடைய வார்த்தைகளையும், தம் வழிகளையும், மதியாத ஜனத்தண்டை தம் குமாரனை அனுப்பியிருக்க மாட்டார். மரியாள் ஓர் சாதாரணமான பெண்ணாய் இருந்தும், அவளை தேவன் இயேசுவின் தாயாக தெரிந்தெடுத்தார். ஆனால் வேதம் மரியாள் நம்மைப்போன்ற பலவீனங்கள் உடைய மனுஷியாக காட்டுகின்றது.

### எனக்கு இவை என்ன போதிக்கின்றது ?

✦ அநேக வருடங்களுக்கு முன்பு, ஆபிரகாமோடே பண்ணின உடன்படிக்கையின் நிறைவேறுதல் (காலத்தியர் 3:6-9) பிறக்கப்போகிற பிள்ளை இந்த உலகத்தையே தலைகீழாக மாற்றும் என்று அறிந்து, மரியாள் தம் பாடலை பாடினாள் (லூக்கா 1:46-55).

✦ இயேசு மரியாளின் கீழ்படிதலை பிரதிபலித்தார். பெற்றோர்களாகிய நாம் நம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். நாம் அப்படி இருக்கிறோமா ?

✦ மரியாளும், இயேசுவும் தேவனுடைய மகிமைக்காக, உலகத்திலே பாடுகளை / அவமானங்களை சகித்தனர். நாம் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு காணும்படியாய் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறோமா ?

✦ மரியாளும், இயேசுவும் ஒருவருக்கொருவர் கரிசனையுள்ளவர்களாய் / விசாரிப்புள்ளவர்களாய், பொறுப்புள்ளவர்களாக இருந்தனர். (யோவான் 19:26-27. நாம் நம் வாழ்க்கையின் அழுத்தங்கள் பெருகும் போது, மற்றவர்கள்மேல் கரிசனையுள்ளவர்களாய் இருக்கிறோமா ?

**ஜோன் லூயிஸ்**



# தேவனின் வீட்டைக் கட்டுதல்

வேத சரித்திரத்தை ஆராய்ச்சி செய்யும்படியாக டட்லி (Dudly Fifeld) ஃபிஃபீல்ட் என்பவர் 33 வருஷமாய் எருசலேம் மாநகரத்தை ஆட்சி செய்த தாவீதின் காலக்கட்டத்திற்கு கடந்து சென்றார். இந்த நாட்களில் கர்த்தர் தாவீதோடு செய்த உடன்படிக்கை அதிக முக்கியத்துவமாகும்.

தாவீதின் நாட்களிலெல்லாம் அவனுக்கு இருந்த ஒரே ஒரு வாஞ்சை, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு வீட்டை / ஆலயத்தை கட்ட வேண்டும் என்பது. இதை ஞாபகப்படுத்தும்படியாய் அவருடைய சங்கீத புஸ்தகத்தில் தேவனை நோக்கி இப்படியாக ஜெபிக்கிறார்.



*“கர்த்தாவே, தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும்.”*

*அவன், நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோப்பின வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும்.*

*என் வீடாகிய கூடாரத்திலே பிரவேசிப்பதுமில்லை. என் படுக்கையாகிய கட்டிலின்மேல ஏறுவதுமில்லை.*

*என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதில்லை என்று,*

*கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனை பண்ணினான்”*

சங்கீதம் 132:1-5, (மற்றும் 1 நாளகமம் 28:1-6, 29:1-5ம் பார்க்கவும்)

இந்த பின்னணியின் காலகட்டத்தில், தாவீது தம் ஆட்சியின் உச்ச கட்டத்தில் இருக்கும்போது, நாத்தான் தீர்க்கதரிசியை அழைத்து, தான் தேவனுக்கு ஒரு ஆலயம் கட்ட வாஞ்சிப்பதை அறிவித்தான்.

ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி, “*பாரும். கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசப் பண்ணும்போது, தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே”* என்றான்.

அப்பொழுது நாத்தான் ராஜாவை நோக்கி, நீ போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும். கர்த்தர் உம்மோடு இருக்கிறாரே என்றான்.

நாத்தனிடம் தேவன், “*நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ*

*எனக்குக் கட்டுவாயோ?" (2சாமுவேல் 7:2-5).*

கர்த்தர் நாத்தான் தீர்க்கதரிசி மூலம், தாவீதுக்கு நீ தேவனுக்கு வீட்டைக் கட்டும்படியாக அனுமதிக்கப்படாமல், கர்த்தர் உன் உண்மையினிமித்தம் "உனக்கு ஒரு வீட்டை உண்டு பண்ணுவார்" என 2 சாமுவேல் 7:11ல் சொன்னார். இந்த வீடு கற்களினாலும், செங்கலினாலும் கட்டப்படுகிற வீடாக அல்லாமல், ஒரு ராஜரீகமான வீடாகவும், கெம்பீரமான அரண்மனயாகவும் இருக்கும். இந்த வீட்டை, கர்த்தர் மகிழும்படியாக, கர்த்தரின் காரியங்களை, தாவீதின் நோக்கங்களைப் / ஆசைகளை பகிர்ந்து கொண்ட ஆண்களும், பெண்களும் இணைந்து கட்டுகிற வீடாய் இருக்கும் ஆபிரகாமோடே கர்த்தர் உடன்படிக்கை செய்தது போல, இப்போது தாவீதோடும் உடன்படிக்கைச் செய்தார்.

"நான் என் ஜனமாகிய இஸ்ரவேலருக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன்போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளைக் கட்டளையிட்ட நாள்வரையில் நடந்ததுபோலும், நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கும்படி அவர்களை நாட்டினேன்."

உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப் பின்பு, உன் கர்ப்பப் பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்திவேன்.

அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன்.

நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன். அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்.

உன் வீடும் உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும். உன் ராஜசபை என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்று சொல்லச் சொன்னார்" *(2சாமுவேல் 7:10-16).*

**வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததி**

கர்த்தர் ஆபிரகாமோடே - அவனும் அவன் சந்ததியும் - கானான் தேசத்தை எப்போதும் சுதந்தரித்துக் கொள்ளுவர் என்று உடன்படிக்கை செய்தது போல இப்போது, கர்த்தர் தாவீதோடு, உன் இராஜ்யம் என்றென்றைக்குப் நிலைநிறுத்தப்படும் என்று சொல்லி *"நான் அவனுக்குச் பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான்"* என்று கூறியுள்ளார். (ஆதியாகமம் 3:15ல் "ஸ்திரீயின் வித்து, பற்றி கூறிப்பிட்டுள்ளது)

இந்த ராஜ்யம் *''உனக்கு முன்பாக''* ஸ்திரப்பட்டிருக்கும் என்று சொல்வதிலிருந்து உண்மையாகவே தாவீதின் முன்னிலையில் அவனுடைய இராஜ்யம் ஸ்திரப்பட்டிருக்கும் என அறியலாம். வேறு விதமாய் சொன்னால், தாவீது இராஜ்யம் ஸ்திரப்படுவதை, தாம் இருக்கும்போதே பார்ப்பார் என்று சொல்லலாம். தாவீதும், ஆபிரகாமும் இறந்து ஆயிரமாயிரமான ஆண்டுகள்



ஆயின. வாக்குத்தத்தை சுதந்தரித்துக் கொள்ள ஒரே வழி அவர்கள் பாவத்திலிருந்து / மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலின் மூலமாகத்தான். ஆகவே, புதிய ஏற்பாட்டில் இவ்விதமாக கூறப்பட்டுள்ளது.

*"இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல் தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள்" (எபிரேயர் 11:13).*

மறுபடியும் வாக்குத்தத்தமானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியதாக உள்ளது. காபிரியேல் தூதனால், மரியாளுக்கு இயேசுவின் பிறப்பைக் குறித்து, உரைக்கப்பட்டதை பார்க்கும்போது, தாவீதுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டதின் நிறைவேறுதலை காணலாம்.

"தேவதூதன் அவளை நோக்கி, மரியாளே பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்.

இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக."

அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை (இந்த வாக்குத்தத்தம்) இயேசு மறுபடியும் இவ்வுலகிற்கு வந்து, தாவீதின் சிங்காசனத்தில் எருசலேமில் அமர்ந்து, முழு உலகத்தையும் அரசாட்சி செய்யாமல் எப்படி நிறைவேறும்.

**தாவீதின் சந்ததி**

கர்த்தரின் சிங்காசனத்தில், தாவீது குமாரனாகிய சாலொமோன் இஸ்ரவேலை அரசாள்வார். தாவீது தன் காலம் முழுவதும் கர்த்தருக்காக ஒரு ஆலயம் கட்ட வேண்டிய காரியங்களைச் செய்தார். முடிவில், தன் குமாரனாகிய சாலொமோனால் ஆலயம் கட்டி முடிக்க (7) ஏழு வருடங்கள் சென்றன. சாலொமோனின் காலத்தில் கர்த்தர் ஆயிரமாயிரமான வருடங்களுக்குமுன் ஆபிரகாமோடே வாக்குப்பண்ணின எல்லா தேசத்தையும் இஸ்ரவேலின் எல்லா தேசத்தையும் இஸ்ரவேலின் இராஜ்யத்தின் எல்லைக்குள் சேர்க்கப்பட்டதாய் இருந்தது.

*"அந்நாளிலே கர்த்தர் ஆபிரகாமோடே உடன்படிக்கை பண்ணி, எகிப்தின் நதி தொடங்கி, ஐபிராத்து நதி என்னும் பெரிய நதி மட்டுமுள்ள"* தேசத்தை கொடுத்தார் *(ஆதியாகமம் 15:18).*

சாலொமோனின் ஞானமும், புகழும் கீர்த்தியும் உலகை கவர்ந்ததாய் இருந்தது. சாலொமோனின் இராஜ்யத்தின் சிறப்பை / புகழை பார்க்கும்படியாக உலகத்தின் பல பகுதிகளிலிருந்து ராஜாக்கள் வந்தனர். அவரில் சேபாவின் ராஜஸ்திரீயும்

ஒருவர். இதைக் குறித்து 1 ராஜாக்கள் 10:1ல் வாசிக்கலாம்.

“கர்த்தர்தருடைய நாமத்தைக் குறித்துச் சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்திசேபாவின் ராஜஸ்திரீக்குக் கேள்வியான போது, அவள் விடுகதைகளினால் அவனை சோதிக்கிறதற்காக,

*“கர்த்தரின் நாமத்தைக் குறித்து”* அவள் கேள்விப்பட்டபோது என்பதை சிந்தித்து பார்த்தால், இஸ்ரவேல் தேசம் கர்த்தருக்கு சாட்சியாக எல்லா தேசங்களைக் காட்டிலும் சிறந்து இருந்தது என அறியலாம். சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தியும் அவருடைய ஞானத்தையும் சேபாவின் ராஜஸ்திரீ கேள்விப்பட்டபோது, அவள் ஆச்சரியத்தால் பிரமை கொண்டாள் (1 ராஜாக்கள் 10:5 வசனம் பார்க்கவும். அவள் திக்பிரமை கொண்டவளாய்/ மூச்சற்றலாய் இருந்தாள்.)

**சாலோமோனின் ஞானம்.**

சாலொமோன் பழைய ஏற்பாட்டின் நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் உன்னதப்பாட்டு என்ற மூன்று புத்தகங்களை எழுதியுள்ளார்.

நீதிமொழிகள் என்ற புத்தகம் நாம் எப்படி வாழ வேண்டும் என்று முக்கியமான கருத்துக்களைக் கொண்டதாய் உள்ளது. இயேசு கிறிஸ்துவால் சொல்லப்பட்ட அநேக உவமைகள் இந்த நீதி மொழிகளின் புத்தகத்திலிருந்து எடுத்து சொல்லப்பட்டவைகளாய் உள்ளன. (உதாரணமாக மத்தேயு 7:24-27 வசனங்கள் நீதிமொழிகள் 12:7 மற்றும் 15:25 வசனங்களோடு ஒப்பிட்டு பார்க்கவும்.)

பிரசங்கியின் புத்தகம் சாலொமோன் தேவனைவிட்டு பிரிந்து வாழ்ந்த தன்னுடைய கடைசி காலக்கட்டத்தில் எழுதப்பட்டதாய் உள்ளது. இந்த உலக வாழ்க்கையெல்லாம் மாயை, எல்லாம் மாயை என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தின் சாராம்சத்தை 2 வது அதிகாரத்தில் காணலாம்.



“என் கைகள் செய்த சகல வேலைகளும் நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன். இதோ, எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருந்தது சூரியனுக்கு கீழே, பலன் ஒன்றுமில்லை.”

மூன்றாவது புத்தகமான ‘உன்னதப்பாட்டு’ ஒரு மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் உள்ள நேசத்தைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தை இஸ்ரவேலர் அதிக விலைமதிக்க முடியாத



ஒரு வாக்குத்தத்த புத்தகமாக, மணவாட்டியாகிய தமக்கும், மணவாளனாகிய கடவுளுக்கும் ஒப்பிட்டு உயர்த்தி கருதுகின்றனர். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அநேக பகுதிகளில் இஸ்ரவேலருக்கும் கடவுளுக்கும் உள்ள உறவை ஒரு திருமண உறவைப்போல உவமைப்படுத்தி, நிழலாட்டமாய் காட்டியுள்ளனர். (உதாரணமாக ஏசாயா 54:5,6, எரேமியா 3:14,20 மற்றும் ஓசியா 2:14-19 வசனங்களை பார்க்கவும்).

இந்த கருத்தை ஆமோதிக்கும் படியாய், புதிய ஏற்பாட்டில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை (மணவாளனாகவும்) அவரின் சபையை (மணவாட்டியகவும்) இணைந்து எபேசியர் 5-ம் அதிகாரம் 22, 23 வசனங்களில் எழுதப் பட்டிருப்பதைக் காணலாம். இந்த அதிகாரத்தில் அப்போல்தலனாகிய பவுல் ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள உறவைக் குறித்து பேசி, முதலில் 32-ம் வசனத்தில் “இந்த இரகசியம் பெரியது. நான் கிறிஸ்துவைப் பற்றியும், சபையைப் பறறியும் சொல்லுகிறேன்” என முடிக்கிறார்.

கர்த்தரின் பெரிதான நிறைவான நோக்கம் என்னவென்றால், “இயேசு கிறிஸ்து மணவாளனாக தம் மணவாட்டியை சந்திக்க வெளிப்படுவார்'' என்று வெளிப்படுத்தின விசேஷத்தில் இப்படியாய் விளக்கப்பட்டுள்ளது.

*“நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்.*

*சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே,*

*பின்னும் அவன் என்னை நோக்கி, ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்.”* (வெளிப்படுத்தின விசேஷம் 19:7-9)

சாலொமோன் தன் ராஜ்யபாரத்தை நல்ல முறையில் துவங்கியிருந்தும் அவன் பிற்பாடு அநேக மனைவிகளை விவாகம் பண்ணினதால், அவர்கள் அவனுடைய இருதயத்தை தேவனைவிட்டு தூரமாய் திருப்பினர். இதன் முடிவு தாவீதிற்காக, அவனுடைய காலத்தில் ராஜ்யம் இருந்த போதும் அவனுடைய மரணத்திற்கு பிறகு இராஜ்யம் யூதா மற்றும் பென்யமீன் கோத்திரங்கள் என்று 2 பாகமாக பிரிக்கப்பட்டு எருசலேமிலிருந்தது ஆளுகை செய்யும்படியாகவும், மற்ற 10 கோத்திரங்களும் தனி ராஜ்யமாகவும் பிரிக்கப்பட்டது.

வெகு குறைவான காலத்திலேயே சிறிய எருசலேம் இராஜ்யம் எரிக்கப்பட இராஜ்யமாய் மாறிற்று.

**டட்லி ஃபிஃபீல்ட்.**